**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - ‘‘ஏ’’ - 2014**

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - ‘‘ஏ’’ இன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப் பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 1979 யூன் 01 ஆம் திகதிய 38/19 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பகுதி 1: பிரிவு (1) இன் பந்தி 9 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை

வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம்- ‘‘ஏ’’ இன் நிலவரம் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு நியமங்கள்

எல்கேஏஎஸ் 07 இல் குறிப்பிடப்பட்டவாறு குறித்த படிவத்தில் நிதியத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 265,253 தொகையான வழக்கத்துக்குமாறான வரவு மீதி சீராக்கப்படாமல் ஐந்தொகை திகதியில் உள்ளவாறான வரி செலுத்த வேண்டிய கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சேமலாப நிதியம் ''ஏ'' மற்றும் ''பீ'' இன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தனிப்பட்ட மீதிக்கும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 1,795,888 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு நிதியத்திற்கு திரண்ட வருடாந்த வங்கியினுடைய பங்களிப்பு ரூபா 14,211,675 ஆனதுடன் இது நிதியத்திற்கு தீர்ப்பனவு செய்யப்படாமல் பல ஆண்டுகளாக பெறவேண்டியவையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2004 இலிருந்து தொங்கல் கணக்கில் (முன்னாள் உறுப்பினர்கள்) இருந்த மீதியை தெளிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் ரூபா 18,268 தொகை காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் நிதியத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிலுள்ள ரூபா 5,663,546 ஆன நேரொத்த மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 3,722,538 ஆன மிகையை விளைவித்திருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,941,008 அல்லது 34.27 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. மீளாய்வாண்டின் போது இருக்கின்ற உறுப்பினர்களின் ஓய்வுபெறல் அதிகரித்தமை இந்த எதிர்மறையான போக்கிற்கான பிரதான காரணமாக இருந்தது.

## 3.2 செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 நிதிசார் மீளாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, நிதியத்தின் கடந்த 03 ஆண்டுகளிற்கான மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2014 | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான வைப்புக்கள், உறுப்பினர்களிற்கான கடன்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் மீதான வட்டி வருமானம் | 1,254,998 | 1,013,264 | 844,336 | 1,250,822 |
| வங்கியின் குறைநிரப்பு பங்களிப்பு | 2,841,401 | 5,222,951 | 6,065,056 | 5,271,604 |
| மொத்த வருமானம் | 4,096,399 | 6,236,215 | 6,909,392 | 6,522,426 |
| செலவினம் | 373,861 | 572,669 | 518,657 | 599,455 |
| ஆண்டிற்கான மிகைகள் | 3,722,538 | 5,663,546 | 6,390,735 | 5,922,971 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) 2011 முதல் 2012 வரையான காலத்தின் போது நிலையான வைப்புக்கள், உறுப்பினருக்கான கடன்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் மீதான வட்டி வருமானம் ரூபா 1,250,822 இலிருந்து ரூபா 844,336 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 1,013,264 இலிருந்து ரூபா 1,254,998 வரை அல்லது 23.85 சதவீதம் வட்டி வருமானம் அதிகரித்திருந்தது.

(ஆ) 2011 இலிருந்து 2012 வரையான காலப்பகுதியின் போது குறைநிரப்பு பங்களிப்பு ரூபா 5,271,604 முதல் ரூபா 6,065,056 வரை அல்லது 15 சதவீதம் அதிகரித்திருந்தது. இது 2012 இலிருந்து 2014 வரையான காலத்தின் போது ரூபா 6,065,056 முதல் ரூபா 2,841,401 வரை அல்லது 53.15 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) நிதியத்தின் செலவினம் 2011 இல் ரூபா 599,455 இலிருந்து 2012 இல் ரூபா 518,657 அல்லது 13.47 சதவீதம் குறைவடைந்திருந்ததுடன் மேலும், செலவினம் 2013 இல் ரூபா 572,669 இலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 373,861 வரை 34.71 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3.3 உறுப்பினர்களின் பங்களிப்பு

கணக்காய்விற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் பங்களிப்புகள் மற்றும் நிதியத்திற்கு கிடைத்த வட்டி என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| | 2014 | | | | 2013 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உறுப்பினர்களின் பங்களிப்பு | வங்கி உதவு பங்களிப்பு | செலவு வைக்கப் பட்ட வட்டி | மொத்தம் | உறுப்பினர்களின் உதவுதொகை பங்களிப்பு | வங்கி பங்களிப்பு | செலவு வைக்கப் பட்ட வட்டி | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| முற்கொண்டு வரப்பட்ட மீதி | 5,791,025 | 8,683,958 | 29,672,141 | 44,147,124 | 6,608,425 | 9,909,385 | 33,583,116 | 50,100,926 |
| கூட்டு | | | | | | | | |
| ஆண்டின் போதான பங்களிப்புகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர் | 500,841 | 751,262 | 3,722,539 | 4,974,642 | 740,960 | 1,111,441 | 5,663,546 | 7,515,947 |
| மொத்தம் | 6,291.866 | 9,435,220 | 33,394,680 | 49,121,766 | 7,349,385 | 11,020,826 | 39,246,662 | 57,616,873 |
| கழி: ஆண்டின் போது செலுத்தப்பட்டவை | 2,555,273 | 3,831,740 | 12,047,266 | 18,434,279 | 1,558,360 | 2,336,868 | 9,574,521 | 13,469,749 |
| முற்கொண்டு செல்லப்பட்ட மீதி | 3,736,593 | 5,603,480 | 21,347,414 | 30,687,487 | 5,791,025 | 8,683,958 | 29,672,141 | 44,147,124 |

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2014 ஆம் ஆண்டில் நிதியத்திற்கான உறுப்பினர்களின் பங்களிப்பு ரூபா 240,119 அல்லது 32.40 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் வங்கி பங்களிப்பும் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டில் 360,179 ஆல் அல்லது 32.40 சதவீதத்தாலும் உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த கொடுப்பனவு ரூபா 4,964,530 அல்லது 36.85 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 3.4. உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள்

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | |
|---|---|---|
| | 2014 | 2013 |
| | ரூபா | ரூபா |
| சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 4,610,885 | 4,895,657 |
| கூட்டு: | | |
| ஆண்டின் போது உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் | 145,000 | 1,950,000 |
| உறுப்பினர்களிற்கான மீளளிப்புகள் | 4,755,885 | 6,845,657 |
| கழி: | | |
| ஆண்டின் போதான அறவீடுகள் | (2,365,606) | (2,234,772) |
| டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 2,390,279 | 4,610,885 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 1,805,000 அல்லது 92.56 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. ஆனால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அறவீடுகள் ரூபா 130,834 அல்லது 5.85 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) ரூபா 2,145,000 தொகையான பின்வரும் கடன்கள் கடன்பெறுவோர் / உறுப்பினர்கள் ஓய்வூதிய திகதியை கருத்திற்கொள்ளாமல் உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது.

| ஊழியர் இலக்கம் | கடன் வழங்கப்பட்ட திகதி | வழங்கப்பட்ட தொகை ரூபா. | இருக்கின்ற சேவைக் காலம் | கடன் தீர்ப்பனவுக் காலம் |
|---|---|---|---|---|
| 98 | 2015.01.01 | 2,000,000 | 1 ஆண்டும் ஒரு மாதமும் | 10 ஆண்டுகள் |
| 88 | 2014.07.04 | 85,000 | 08 மாதங்கள் | 10 ஆண்டுகள் |
| 88 | 2014.04.08 | 60,000 | 11 மாதங்கள் | 10 ஆண்டுகள் |
| | | 2,145,000 | | |

## 4. கணக்களிப்பெறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தலிலுள்ள தாமதம்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 02 மாதங்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 20 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 நிதியத்தின் ஸ்தாபிப்பு, அதிகாரம் மற்றும் முகாமைத்துவம்

1975 இன் 13 ஆம் இலக்க இலங்கை அரச ஈட்டு, முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 85(2) ஆம் பிரிவின் பிரகாரம் அரச ஈட்டு முதலீட்டு வங்கி சேமலாப நிதியம்-‘‘ஏ’’ தாபிக்கப்பட்டிருந்தது. 1975 இன் 13 ஆம் இலக்க இலங்கை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 85(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மாதாந்த அல்லது நாள் சம்பளம் கொடுக்கப்படும் சகல ஊழியர்களும் இலங்கை அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் ஊழியர்களாக கருதப்படுவதுடன் வங்கியில் அவர்களின் தொழில் புரிவதற்கான நிபந்தனையாக சேமலாப நிதியம் - ‘‘ஏ’’ யின் உறுப்பினர்களாவதுடன் அரச ஈட்டு, முதலீட்டு வங்கியின் ஊழியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தனர். அத்துடன் நிதியமானது, பணிப்பாளர் சபை பொது முகாமையாளர் அல்லது அவருக்காக அந்த நேரத்தில் பதில் கடமையாற்றும் நபரினால் வருடாந்தம் நியமிக்கப்படும் வங்கியின் பணிப்பாளர்களால் நியமிக்கப்படும் ஊழியர்களைப் கொண்ட இரண்டு பணிப்பாளர்கள், மற்றும் ஊழியர்களைக் கொண்ட நிதியத்தின் இரண்டு

உறுப்பினர்களைக் கொண்ட முகாமைத்துவக் குழுவின் மூலம் நிதியத்தின் கட்டுப்பாடு, முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் என்பன மேற்கொள்ளப்படுகின்றது.